இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இதோ! முன்பு எழுந்த விண்மீன் தோன்றி குழந்தை இருந்த இடத்திற்கு மேல் வந்து நிற்கும்வரை அவர்களுக்கு முன்னே சென்று கொண்டிருந்தது. அங்கே நின்ற விண்மீனைக் கண்டதும் அவர்கள் மட்டில்லாப் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள். வீட்டிற்குள் அவர்கள் போய்க் குழந்தையை அதன் தாய் மரியா வைத்திருப்பதைக் கண்டார்கள்; நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து குழந்தையை வணங்கினார்கள்; தங்கள் பேழைகளைத் திறந்து, பொன்னும் சாம்பிராணியும் வெள்ளைப் போளமும் காணிக்கையாகக் கொடுத்தார்கள். (மத் 2:9-11)

# திருத்தந்தை வழங்கும் ஆண்டவரின் பிறப்பு, அமைதியின் பிறப்பு செய்தி

## (ஊர்பி எத் ஓர்பி)

“உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!”(லூக்.2:14) என அன்று வானதூதர்கள் பெத்லகேம் இடையர்களுக்கு, இயேசுவின் பிறப்பு குறித்து அறிவித்தனர். கன்னி மரியாவிடம் பிறந்த ஆண்டவர் இயேசு, இந்த அமைதி என்ற கொடையோடு, நம்பிக்கை மற்றும், பற்றுறுதியில் நீங்கள் வளரும் வண்ணம், கடவுளின் அன்பை உங்கள் எல்லாருக்கும் கொணர்வாராக.

இப்பெருவிழா நாளில் பெத்லகேம் நோக்கி நம் கண்களை உயர்த்துகிறோம். ஆண்டவர் தொழுவத்தில் இவ்வுலகுக்கு வந்தார், மற்றும், அவர், விலங்குகளுக்காக உள்ள




தீவனத் தொட்டியில் கிடத்தப்பட்டார். ஏனெனில், மரியா தம் மகன் இயேசுவைப் பெற்றெடுக்க காலம் வந்தபோதும்கூட அவரின் பெற்றோரால் ஓர் அறையைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர் நம் மத்தியில் அமைதியிலும், இரவின் இருளிலும் வந்தார் ஏனெனில், இறைவார்த்தைக்கு குறிப்பிட்ட இடமோ அல்லது உரத்த மனிதக் குரல்களோ தேவையில்லை. அவரே இறைவார்த்தையாக, நம் பாதையை ஒளிர்விக்கும் ஒளியாக, வாழ்வுக்குப் பொருள் கொடுக்கிறார், நற்செய்தி நமக்குக் கூறுவதுபோல், “உண்மையான ஒளியாகிய அவர், அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் ஒளியாக உலகிற்கு வந்தார்” (யோவா.1:9).

இயேசு நம் மத்தியில் பிறந்திருக்கிறார், கடவுள் நம்மோடு இருப்பவராக அவர் இருக்கிறார். நம் இன்ப, துயரங்கள், நம் நம்பிக்கைகள், அச்சங்கள், என அனைத்திலும் நம்மோடு பகிர்ந்துகொள்ள நம் வாழ்வில் உடன்பயணிக்க அவர் வருகிறார். ஆதரவற்ற குழந்தையாக அவர் வருகிறார். ஏழையின் மத்தியில் ஏழையாக, அனைத்தும் தேவைப்பட்டவராக, குளிரில் பிறந்த அவர், வெதுவெதுப்பு மற்றும், குடியிருப்புக்காக நம் மனித இதயங்களின் கதவுகளை தட்டுகிறார்.

ஒளியால் சூழப்பட்டிருந்த பெத்லகேம் இடையர்கள் போன்று, கடவுள் நமக்களிக்கும் அடையாளத்தைப் பார்ப்பதற்குப் புறப்படுவோமாக. நாம் கொண்டாடும் ஒருவரின் பிறப்பை மறக்கடிக்கும், ஆன்மிகச் சோம்பல் மற்றும், மேலோட்டமான பகட்டான விடுமுறையை வெற்றிக்கொள்வோமாக. இறைமகன் நமக்காகப் பிறந்துள்ள மாபெரும் நிகழ்வைத் தியானிப்பதைவிட, நம் இதயங்களை மழுங்கடித்து, அலங்காரங்கள் மற்றும், பரிசுப்பொருள்களுக்கு அதிகநேரம் நம்மைச் செலவழிக்க வைக்கும் காரியங்களைப் புறந்தள்ளுவோமாக.

### இயேசுவே நம் அமைதி

இயேசு கிறிஸ்து அமைதியின் வழியுமாவார். அவர், தம் மனிதப்பிறப்பு, பாடுகள், மரணம் மற்றும், உயிர்ப்பால், தன்னையே முடக்கிக்கொண்டுள்ள ஓர் உலகிலிருந்து வழிநடத்திச் செல்லும் பாதையைத் திறந்துவிட்டுள்ளார். பகைமை மற்றும், போரின் இருள்சூழ்ந்த நிழலால் நசுக்கப்பட்டுள்ள ஓர் உலகில், உடன்பிறந்தஉணர்வு மற்றும் அமைதியில் வாழ்வதற்குத் திறந்த மற்றும், சுதந்திரமான பாதையை அவர் திறந்துவிட்டுள்ளார். அந்தப் பாதையை நாம் பின்றறுவோம்.

### அமைதியின் பாதையைத் தடுக்கும் எதிர்மறை சக்திகள்

நம் சுமைகள் என்ன? கடினமான பாரமாக இருப்பது எது? இயேசுவின் பிறப்பை ஏற்று, அதனை வரவேற்பதிலிருந்து அரசன் ஏரோதையும் அவரது அவையையும் தடைசெய்த, பதவி, பணம், ஆணவம், வெளிவேடம், போலித்தனம் போன்ற அதே எதிர்மறை சக்திகளே, பெத்லகேமுக்குச் செல்வதிலிருந்து நம்மைத் தடுத்து நிறுத்துகின்றன. கிறிஸ்மஸின் திருவருளிலிருந்து நம்மை ஒதுக்குகின்றன. அமைதிப் பாதையின் நுழைவாயிலை அடைத்து விடுகின்றன. உண்மையில், மனித சமுதாயத்தைத் தொடர்ந்து வதைக்கும் போரின் பனிக்காற்றை, அமைதியின் இளவரசரும் நமக்குக் கொடுத்துள்ளார் என்பதை கவலையோடு நாம் ஏற்கவேண்டும்.

### உக்ரைனில் அமைதிக்காக...

உக்ரைனில் பத்து மாதங்களாக இடம் பெற்றுவரும் போரின் கொடுமையால், இந்த கிறிஸ்மஸ் நாளில் இருளிலும், கடுங் குளிரிலும் வாழ்கின்ற நம் உக்ரேனியச் சகோதரர் சகோதரிகள், மற்றும், தங்களின் வீடுகளைவிட்டு தொலைவில் வாழ்கின்றவர்களின் முகங்களையும் பார்ப்போம். துன்புறும் எல்லாருக்கும் வெளிப்படையான தோழமையுணர்வு காட்டுவதற்கு ஆண்டவர் நம்மைத் தூண்டுவாராக. ஆயுதங்களின் இடிமுழக்கம் கேட்காமல் இருக்கச் செய்யவும், அறிவற்றதனமான இப்போரை உடனடியாக முடிவுக்குக் கொணரவும் அதிகாரத்தைக் கொண்டிருப்போரின் மனங்களை ஆண்டவர் ஒளிர்விப்பாராக.

### பசியால் வாடுவோரை நினைத்துப் பார்க்க...

இப்பெருவிழா நாளில் உணவு உண்ண நாம் அமர்ந்திருக்கையில், “ரொட்டியின் வீடு எனப்பொருள்படும் பெத்லகேமிலிருந்து நம் கண்களைத் திருப்பாதிருப்போம். பெருமளவான உணவு கள் வீணாக்கப்படல் மற்றும், வளங்கள் ஆயுதங்களுக்குகெனப் பயன்படுத்தப்பட்டு வரும்போது பசியால் வாடும் அனைவரையும் குறிப்பாக சிறாரை நினைத்துப் பார்ப்போம்.

### புலம்பெயர்ந்தோரை வரவேற்றல்

அன்புச் சகோதரர் சகோதரிகளே, புறக்கணிப்பால் நோயுற்றுள்ள இன்றைய ஓர் உலகுக்குள் உண்மை ஒளியாகிய இயேசு இன்று வந்துள்ளார். பலநேரங்களில் ஏழைகளுக்கு நாம் செய்வதுபோல, இந்த உலகம் அவரை வரவேற்கவில்லை, அவரைப் புறக்கணிக்கிறது, சில வசதி, உணவு மற்றும், குளிராடைகளுக்காக பல புலம்பெயர்ந்தோரும், குடிபெயர்ந்தோரும் நம் கதவுகளைத் தட்டுகின்றனர். விளிம்பு நிலையில் இருப்போர், தனிமையில் வாழ்வோர், கைவிடப்பட்டோர், நோயாளிகள், வயது முதிர்ந்தோர், கைதிகள் போன்றோரை மறக்காதிருப்போம்.

அமைதி ஒவ்வொரு நகரத்திலும், ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொரு மனிதரிலிருமிருந்து தொடங்கவேண்டும். நாம் அமைதியின் கருவிகளாகச் செயல்படுவோம் என்று திருத்தந்தை வேண்டுகோள் விடுத்தார்.

# ஜொகூர் பாரு, நூசா பெஸ்தாரி அடிப்படை திருஅவை சமூகத்தில் கிறிஸ்மஸ் விருந்து நிகழ்ச்சி

**ஜொகூர் பாரு:** கடந்த டிசம்பர் மாதம் இங்குள்ள அமல உற்பவ அன்னை (CIC) பங்கின் நூசா பெஸ்தாரி அடிப்படை திருஅவை சமூகத்தில் கிறிஸ்மஸ் விருந்து மற்றும் ஒன்றுகூடல் நிகழ்ச்சி ஒன்று மிகவும் குதூகலமாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் 15 குடும்பங்களைச் சேர்ந்த ஏறக்குறைய 40 பேர் ஆர்வத்தோடு பங்கேற்றனர். திருவருகைக் காலத்தில் இங்குள்ள குடும்பங்களை ஒன்றிப்பதும் திருவருகைக் காலத்தின் சிறப்பை நினைவுகூர்ந்து கொண்டாடுவதும் இந்நிகழ்வின் முக்கியக் குறிக்கோளாக இருந்தது என்று ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்தனர்.

தொடக்கத்தில், இறைவேண்டலோடு தொடங்கிய இந்நிகழ்வில் இறைவார்த்தை வாசிக்கப்பட்டு பகிரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. *(தொடர்ச்சி –அடுத்தப்பக்கம்)*



நிகழ்ச்சியில் பங்கேற்ற அ.தி.ச. உறுப்பினர்

# ஜொகூர் பாரு, நூசா பெஸ்தாரி அ. தி. சமூகத்தில் கிறிஸ்மஸ் கொண்டாட்டம்

*முதல் பக்கத் தொடர்ச்சி,*

அடுத்து, கிறிஸ்மஸ் விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் கிறிஸ்மஸ் பஜனை பாடல்களும், 'கிறிஸ்மஸ் தாத்தா' வரவும் ஆடல் பாடல்களும் சிறார்களை மிகவும் கவர்ந்தது. தொடர்ந்து விருந்து உபசரிப்பும் பரிசுகள் வழங்கும் அங்கமும் நிகழ்ச்சிக்கு மேலும் மெருகூட்டியது.



நிறைவாக, அனைத்து குடும்பங்களுக்கும் கிறிஸ்மஸ் பரிசு பொருள்கள் வழங்கப் பட்டது. அடுத்துப் பிறக்கும் 2023 ஆம்




ஆண்டில் மேலும் பயன்மிக்க நல்ல நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்ய ஆர்முடன் காத்திருப்பதாக ஏற்பாட்டுக் குழு உறுதி பூண்டது.

அடுத்து, கடந்த 2022, 8 டிசம்பர் அன்று கொண்டாடப்பட்ட பங்கின் குடும்பத்தின நிகழ்ச்சியில், இப்பங்கில் இயங்கும் தமிழ் இளைஞர் பணிக்குழுவானது மிகவும் முறையாக அமைக்கப்பட்டு இயங்குவதாகவும், குழுவினர் ஆர்வத்தோடு செயலாற்றுவதாகவும் பங்குத்தந்தை எடி இராயப்பன் அவர்கள் அனைவரையும் வாழ்த்தி புகழாரம் சூட்டினார்.

பங்கின் தமிழ் இளைஞர் பணிக்குழுவானது அருட்சகோதரி நெஸ்ரி மற்றும் அருட் சகோதரி ரெஜினா ஆகியோரின் ஆலோச னையின் கீழ் மிகச் சிறப்பாகப் பணிகளை ஏற்று நடத்துவதாகவும் பங்குத்தந்தை பெருமிதம் கொண்டார்,

இப்பணிக்குழுவில் உள்ளோர் இளம் வயது இளைஞர்களாகவும் வேலை செய்யும் இளைஞர்களாகவும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மற்றும் ஒவ்வொரு 5-வது வாரமும் இவர்களே திருப்பலிக்குத் தயார் செய்யும் பொறுப்பினையும், குடும்பத்தின நிகழ்வையும் ஏற்று செவ்வன செய்து வருவதாகவும் பங்குத்தந்தை கருத்துரைத்தார்.

நிறைவாக, அடுத்து வரும் ஆறு மாதங்களுக்கு இப்பணிக்குழுவை பொறுப் புடன் வழிநடத்தும் பொறுப்பாளர்களாக விக்டர், சார்ல்ஸ் மற்றும் பிரிஸ்கிலா ஆகியோர் தேர்வுச் செய்யப்பட்டனர்.

-எட்ரியன் லோகநாதன்

## இயேசு காவியம்

"தத்துவ ஞானம் புத்துயிர் பெற்றது
யூத நிலத்தினிலே
சத்திய வேதம் நின்று நிலைத்தது
தாரணி மீதினிலே!
எத்தனை உண்மை வந்து பிறந்தது
இயேசு பிறந்ததிலே!
இத்தனை நாளும் மானிடன் வாழ்வது
இயேசுவின் வார்த்தையிலே!

மண்ணிடை இயேசு மறுபடி வருவார்
என்பது சத்தியமே!
புண்கள் இருக்கும் வரையில் மருந்து
தேவை நித்தியமே!
விண்ணர சமையும் உலகம் முழுவதும்
இதுதான் தத்துவமே!
எண்ணும் எழுத்தும் எல்லாம் அவரே
இயேசுவை நம்புவமே!"

- கண்ணதாசன்

# சிறைச்சாலையில் சிரம்பான், மினவுதல் அன்னை பங்கின் இயேசு பிறப்பு பெருவிழா கொண்டாட்டம்

**சிரம்பான்:** இன்றைய நாளை அகில உலகமும் ஆண்டவர் இயேசுவின் பிறப்பினால் மகிழ்ந்து கொண்டாடுகின்றது. கிறிஸ்துவின் பிறப்பு ஒரு மகிழ்ச்சி மிகு செய்தியாகும். சிறுவர்கள் முதல் முதியோர்கள் எல்லாரும் மகிழ்ந்து ஆடிப்பாடும் ஒரு கொண்டாட்டமாகும். உலகிற்கு மகிழ்ச்சியைக் கொடுக்க ஆண், பெண் சமவுரிமையை ஏற்படுத்த ஏழை


*சிறைச்சாலை கைதிகள் மற்றும் அதிகாரிகள் மத்தியில் அருள்தந்தை சேவியர் என்ரூ*

பணக்காரன் என்ற பொருளாதாரத்தில் சம பங்கீட்டை உருவாக்க, சிறைப் பட்டோர் விடுதலை அடைவர், பார்வை யற்றோர் பார்வைபெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் இறைவன் மனுவுருவானார்.

ஆகவே, இது மிகழ்ச்சியின் கொண்டாட் டம். இக்கொண்டாட்டம் அனைவருக்கும் உரியது. இதனிமித்தம் சிரம்பான் நகர் சிறைச்சாலையில் பல மாதங்களாக, வருடங்களாக குடும்பங்களைப் பிரிந்து, விடுதலைக்காக ஏங்கித் தவிக்கும், மற்றும் நம்பிக்கையில் தளர்ந்து போன கைதிகள் மத்தியில் இயேசு பாலகன் அருளும் மகிழ்ச்சியையும் அவர்கள் வாழ்வில் நம்பிக்கையொளி ஏற்றும் நோக்கத்திலும் இங்குள்ள மினவுதல் அன்னை பங்கின் பங்குத்தந்தை சேவியர் என்ரூ அவர்களின் தலைமையில் சிறைச்சாலை சந்திப்புப் பணிக்குழு கைதிகள் மத்தியில் ஒரு கிறிஸ்மஸ் கொண்டாட்ட நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது உண்மை மகிழ்ச்சிக்கு வழிவகுத்தது.

கிறிஸ்து இவ்வுலகிற்கு உணவாய் வந்தார் எனில், நாம் பசியோடு இருப்பவர்களின் பசியைப் போக்க வேண்டும். இயேசு இவ்வுலகிற்கு அமைதியின் அரசராய் வந்தார் எனில், நாம் இவ்வுலகில் அமைதியை ஏற்படுத்த உழைக்க வேண்டும். இவ்வாறு நாம் வாழும்போது தான் கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவை அர்த்தமுள்ளதாக்க முடியும். சிறைப்பட் டோரிலும் ஆண்டவர் பிறக்க வேண்டும், எதிர்நோக்கின் ஒளி அவர்களில் ஒளிர வேண்டும் என்பது இந்த விருந்தோம் பலின் நோக்கம் என குழு உறுப்பனர் களில் ஒருவரான சேவியர் சகநாதன் தெரிவித்தார்.

சிறைப்பட்டோருடன் ஏற்பாடு சய்யப் பட்ட இந்த கிறிஸ்மஸ் பெருவிழாக் கொண்டாட்டத்தில் சிறைச்சாலை கைதி களும், தலைமை அதிகாரியும், இதர அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறைக்கைதிகளை வெறும் குற்றவாளி களாகப் பார்க்காமல் வாரந்தோறும், மாதந்தோறும் சென்று அவர்களுக்கு ஆறுதலும் கிறிஸ்து அருளும் நம்பிக் கையையும் பகிர்ந்து வரும் சிறைச்சாலை பணிக்குழுவினரின் பணி சிறிது எனினும் ஞாலத்தின் மாண பெரிது.

# ஆண்டவரின் வெளிப்பாட்டை வெளிப்படுத்துவோம் !

இன்று ஆண்டவரின் திருக்காட்சி பெருவிழாவை நாம் கொண்டாடுகிறோம். கீழ்த்திசை ஞானிகள் ஆண்டவரைத் தேடி வந்தபோது அவரைக் கண்டு மட்டில்லா மகிழ்ச்சி அடைந்தார்கள் என்று நற்செய்தியில் வாசிக்கிறோம். இந்தக் கீழ்த்திசை ஞானிகள் அரசர்களாக இருக்கலாம் என்பதை இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல் வாசகத்தில், வருகின்ற, "மன்னர் உன் உதய கதிர்நோக்கி நடைபோடுவர்" (எசா 60:3) என்ற பகுதி எடுத்துரைப்பதாக உள்ளது.

லூக்கா நற்செய்தியில் இயேசு கிறிஸ்துவின் பிறப்பை ஒட்டி நடைபெறக்கூடிய நிகழ்வு களில், இடையர்களுக்கு ஆண்டவர் இயேசு தன்னை வெளிப்படுத்துவதாக வாசிக்கி றோம். இன்றைய மத்தேயு நற்செய்தியிலோ ஆண்டவர் இயேசு, புறவினத்தார்களாகிய ஞானிகளுக்குத் தன்னை வெளிப்படுத்து கிறார்.

முதல் வாசகத்தில், பாபிலோனியர்களால் நாடு கடத்தப்பட்ட யூதா நாட்டினர் அன்னிய மண்ணில் அடிமைகளாகவும், கடவுள் தங்களைக் கைவிட்டார் என்ற எண்ணத்தோடும் வாழ்ந்து வந்தார்கள். இத்தகைய சூழ்நிலையில் புதிய எருசலேமைக் குறித்து பேசுகின்ற இறைவாக்கினர் எசாயா, "பிற இனத்தார் உன் ஒளி நோக்கி வருவர்; பிற இனத்தாரின் சொத்துகள் உன்னை வந்தடையும்" என்கின்றார். இதன்மூலம் மெசியாவாம் இயேசு எல்லாருக்குமானவர் என்ற உண்மை நிலை நாட்டப்படுகின் றது.

நற்செய்தியில், கீழ்த்திசை ஞானிகள் இயேசுவைத் தேடி வந்ததை ஒட்டி, மூன்று விதமான மனிதர்கள் நற்செய்தியில் இடம்பெறுவதை அறிகிறோம். **முதலில் பதவிக்காக எதையும் செய்யத் துணியும் ஏரோது போன்றவர்கள்.** இந்த ஏரோது, "யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கின்றவர் எங்கே?" என்று ஞானிகள் கேட்டதும், எங்கே தன்னுடைய பதவிக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று கலங்குகின்றான். இந்த ஏரோதைப் போன்று பதவிக்காக எதையும் செய்யத் துணியும் மனிதர்களை நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நாம் பார்க்கலாம். **இரண்டாவது வகையினர் இயேசுவை, கடவுளைப் பெரிதுபடுத்தாத மறைநூல் அறிஞர்களைப் போன்றவர்கள்.** இந்த மறைநூல் அறிஞர்களுக்கு இயேசு எங்கே பிறப்பார் என்று நன்றாகவே தெரிந்திருந்தது. இருந்தாலும், அவர்கள் எருசலேமிற்கு மிக அருகில் இருக்கும் பெத்லகேமில் பிறந்த இயேசுவைக் காண விருப்பமில்லாமல் இருக்கின்றார்கள். இன்றைக்கும் கூட, பலர் பெயரளவுக்குக் கிறிஸ்தவர்களாக இருந்து கொண்டு, கடவுளிடம் பட்டும்படாமல் தொடர்பு கொண்டிருப்பதைப் பார்க் கலாம்.

**மூன்றாவது வகையினர் இயேசுவை முழுமனத் தோடு தேடிய ஞானிகளைப் போன்றவர்கள்.** இவர்கள் இயேசுவைக் காண்பதற்காகப் பல்வேறு துன்பங்களையும் இறையூறு களையும் சந்தித்திருக்க வேண்டும் என்று அறிந்திருந்தும், அவற்றையெல்லாம் கடந்து இவர்கள் இயேசுவைக் காணும் பேறுபெறு கின்றார்கள். நாம் ஒவ்வொருவரும் ஏரோது போன்றோ, மறைநூல் அறிஞர்களைப் போன்றோ அல்லாமல், ஞானிகளைப் போன்று முழு மனத்தோடு ஆண்டவரைத் தேடி, அவர் தருகின்ற ஆசிகளைப் பெற முற்பட வேண்டும். முயற்சி நிச்சயம் திருவினையாக்கும்.

நிறைவாக, ஞானிகளுக்கு வழிகாட்டிய அந்த நட்சத்திரம்; கற்றுத்தந்த பாடத்தை நம் வாழ்வில் கற்றுக் கொள்ள வேண்டும். இறைமகனை நாம் எந்த விதத்தில் பிறருக்கு வெளிப்படுத்துகிறோம் என்பதுவே முக்கிய மானது. நம் சிந்தனை, எண்ணங்கள், வார்த்தைகள், செயல்பாடுகள் இவை அனைத்தும் ஆண்டவராகிய மீட்பரை நம் வாழ்வில் வெளிப்படுத்தக்கூடியவையாக அமைய ஒவ்வொரு நாளும் முயற்சிப்போம். இயேசுவே உலக மீட்பர். அவரே வாக்களிக்கப்பட்ட மெசியா என்பதை இவ்வுலகம் ஏற்க பாடுபடுவோம்.

*-ஆர்.கே.*

### ஆண்டவரின் திருக்காட்சி

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | எசா 60:1-6 |
| தி. பாடல்: | 72: 1-2. 7-8. 10-11. 12-13 |
| 2ம் வாசகம்: | எபே 3: 2-3a, 5-6 |
| நற்செய்தி: | மத் 2: 1-12 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**

**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**

**திருப்புகழ் மாலை- ஆண்டவரின் திருக்காட்சி**